ॐ

॥ श्रीनन्दिकेश्वरकाशिका ॥

श्रीतत्त्वविमर्शिनीव्याख्यासहिता

ஸ்ரீ மாகேசுவரசூத்திரவியாக்கியானமாகிய

ஸ்ரீ நந்திகேசுவரகாசிகையும்

அதற்கு

ஸ்ரீ உபமன்யுமுனிவர் அருளிச்செய்த

தத்துவவிமர்சினிவியாக்கியானமும்

இவை

திருமந்திரநகர்

மகா-ள-ள-ஸ்ரீ ஆ. பாக்கியம் பிள்ளை அவர்கள்

வேண்டுகோளின்படி

ஸ்ரீமத் வி. துப்புஸ்வாமிகள் அவர்களா

இயற்றப்பட்ட

தமிழ்மொழிபெயர்ப்புடன்

தஞ்சை:

ஸ்ரீ வித்தியாவிநோதினிமுத்திராசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

Copyright Reserved.

விலை அணா ௩.

ओं

ஸ்ரீ குருப்யோ நம:

113

உலகெலா முணர்ந் தோதற் கரியவ
னிலவுலாவிய நீர்மலி வேணிய
னலகில்சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

சிறப்புப்பாயிரம்

இந்நூலாசிரியர் மாணாக்கருள் ஒருவராகிய
தஞ்சை வலம்புரி தமிழ்வித்வான்
மகா-ள-ள-ஸ்ரீ
அ. பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்கள்
இயற்றிய
நேரிசையாசிரியப்பா.

இமிழ்கடல் வரைப்பி னினிமைசான் றமைந்த
தமிழுணர் பவர்க்குத் தத்துவப் பொருள்கள்
அமிழ்துறத் தெரிக்கு மரியன நூற்பல
மொழிபெயர்த் தருளிய முறைமையின் வடநூல்
தன்னியன் மாண்புந் தனிப்படக் காட்டிய
மக்களு யிர்க்கு மன்னருள் கிடைப்பான்
ஐந்தொழிற் கூத்தை யணிபெற நவில்வோன்
தமருகத் துதித்தத் தனிமா கேச்சுர
சூத்திர மாகிய நாயகன் றூலின்
முந்திய வுரையா நந்தியெம் பெருமான்

காரிகை யாற்செய் காசிகை நூலும்
அன்னத னெண்மை மன்னுறத் தெரிப்ப
உபமன் னியுமுனி யுவந்தரு டத்துவ
விமர்சினி யெனப்படும் வியப்புறு நூலையு
மொழிபெயர்த் தருள வேண்டுமென் றியாதும்
பழிதபுத் துயர்ந்த பண்புமிக் குடையன்
திருமந் திரநகர் செய்தவத் தமர்வோன்
ஆக்கிய பயன்சேர் பாக்கியம் பிள்ளை
இரந்தன னாக விரங்கிய வுளத்தான்
வங்கெதழின் மொழியாந் தீந்தமி ழிடத்துப்
போதரச் செய்தான் புண்ணியப் பயனால்
வணங்குறு பவர்தம் மம்ம ரறுத்துக்
குணங்கொளச் செய்யும் குணநிறை குன்றம்
விஞ்சையிற் றெளிந்த தஞ்சைநன் னகரான்
தூமொழி யல்லாச் சொல்வழக் கறுப்பான்
நாமொழி யொழித்த நன்மைமிக் குடையோன்
எம்மனோர் மனத்தின் றிரும்பிணி யகல
செம்மைசேர் பொருளுரை செப்புநற் கருணையன்
குப்புசாமிப்பெயர் கொள்ளுந்
திப்பிய வாசர் திருக்குலத் தவனே.

ॐ

॥ नमः परमात्मने ॥

॥ श्री नन्दिकेश्वरकाशिका ॥

व्याख्यानम् ॥

नमः शिवाय देवाय सर्वज्ञाय परात्मने ।
यस्योन्मेषनिमेषाभ्यां व्यक्ताव्यक्तमिदं जगत् ॥
* श्रीशंकरं कुमारं च शैवतत्त्वविशारदम् ।
प्रणम्य नन्दिकेशादीन्शिवभक्तान्मुहुर्मुहुः ॥
काशिकामादिसूत्राणां नन्दिकेशकृतां शुभाम् ।
लोकोपकारिणीं दिव्यां व्याकरोमि यथामति ॥

ஓம்.

காசிகையின் வியாக்கியானம்.

மங்கலம்.

எவருடைய இமையினைத் திறத்தல் மூடுதல்களால் இவ்வுலகம் வியக்தமும் அவ்யக்தமுமாகின்றதோ, அத்தன்மைய பரமாத்மாவும்

---

* 'गुरुं शंकरं कुमारञ्च' इति 'श्रीशं गुरुं कुमारञ्च' इति च पाठः ।

ஸர்வஞ்ஞரும் தேவனுமாகிய சிவத்திற்கு நமஸ்காரம். ஸ்ரீசங்கரரையும் சைவதத்துவத்திற் றேர்ந்தவராகிய குமாரக்கடவுளையும் நந்திகேசுவரர்முதலிய சிவபக்தர்களையும் அடிக்கடி வணங்கி, ஆதிசூத்திரங்கட்கு நந்திகேசுவரராற் செய்யப்பட்டதும், சுபமானதும், லோகோபகாரமானதும், திவ்யமுமான காசிகைக்குப் புத்திக்கியன்றவரையில் வியாக்கியானஞ் செய்கின்றேன். (க-ங)

व्याख्यानम्

इह खलु सकललोकनायकः परमशिवः सनकसनन्दनसनत्कुमारादीञ्श्रोतॄन्नन्दिकेश्वरपतञ्जलिव्याघ्रपादादींश्चोद्धर्तुं ढक्कानिनादव्याजेन चतुर्दशसूत्र्यात्मतत्त्वमुपदिदेश । तदनु ते सर्वेमुनीन्द्रवर्याश्चिरकालाश्रितानामस्माकमात्मतत्त्वमुपदिदेशेति मत्वास्य सूत्रजालस्य तत्त्वार्थं नन्दिकेश्वरो जानातीति नन्दिकेश्वरं प्राणिपत्य पृष्टवन्तः । तेषु पृष्टवत्सु स षड्विंशति काशिकारूपेण तत्त्वं सूत्राणामुपदेष्टुमिच्छन्निदमाचचक्षे—

வியாக்கியானம்.

இங்கு நிச்சயமாக சகலலோகநாயகரான பரமசிவன் ஸநகஸநந்தனஸநத்குமாரர் முதலிய கேள்விபாளரையும் நந்திகேசுவரர் பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலியோரையும் கரையேற்றும்பொருட்டு, உடுக்கையொலிநிமித்தத்தால் பதினான்குசூத்திர வடிவினதாகிய தத்துவத்தினை யுபதேசித்தார். அதன்பின், அவ்வெல்லா முனீந்திரசிரேஷ்டர்களும் நெடுங்காலம் ஆசிரயித்துள்ள எம்மனோர்க்குப் பதினான்கு சூத்திரவடிவ ஆத்மதத்துவத்தினை யுபதேசித்தருளினனென் றிவ்வாறு மதித்து, இச்சூத்திரக்கூட்டங்களின் உண்மைப்பொருளை நந்திகேசுவரர் அறிவாரென்று நந்திகேசுவரரைச் செவ்வையாய் வணங்கிக் கேட்டார்கள். அவர்கள் கேட்டபோது, அவர் இருபத்தாறு காரிகைவடிவமாகச் சூத்திரங்களின் தத்துவத்தை யுபதேசிக்க விரும்பியவராய் இதனைச் சொல்லலாயினர்.

श्रीनन्दिकेश्वरकाशिका ॥

नृत्तावसाने नटराजराजो
ननाद ढक्कां नवपञ्चवारम् ।
उद्धर्तुकामः सनकादिसिद्धा-
नेतद्विमर्शे शिवसूत्रजालम् ॥ १ ॥

ஸ்ரீ நந்திகேசுவரகாசிகை.

நிருத்தியத்தின் முடிவில் நடராஜராஜர், ஸநகாதி சித்தர்களைக் கரையேற்ற விரும்பியவராய் ஒன்பதைந்துமுறை உடுக்கையினையொலித்தார்(சப்திக்கச்செய்தார்). இச்சிவசூத்திரஜாலத்தினை ஆய்கின்றேன். (௧)

व्याख्यानम्

नृत्तेति । अहमिति शेषः । नटराजराज इत्यनेन मङ्गलादीनि दर्शितानि । विश्वरूपविलासवैचित्र्यचमत्कारप्रवीणत्वान्नटराजराजः । ताण्डवाख्यरासमात्रविलासवैचित्र्यचमत्कारप्रवीणत्वस्य त्वन्यत्र नटादावपि सत्त्वात् । स त्वात्मतत्त्वं वागाद्यगोचर इति ज्ञापनार्थं ढक्कानिनादव्याजेन सनकादीनुद्धर्तुकामोऽयं नवपञ्चवारं

चतुर्दशवारं स्वान्तर्गतमात्मतत्त्वं प्रकटयितुं नृत्तावसाने ढक्कां ननाद नादितवान् । अहं तदेतद्धिततनिनादोद्भूत-वर्णात्मकमाद्यमतिरहस्यं शिवसूत्रजालं शिवसंबन्धिसू-त्रसमूहं कल्याणरूपसूत्रसमूहं वा विमर्शे विचार्य स्फुटी-करोमीत्यर्थः । 'विमर्शे' इति च्छान्दसं बोध्यम् ॥१॥

வியாக்கியானம்.

'நிருத்திய' என்பதனால், அகம் (யான்) என்பது சொல்லெச்சம். நடராஜராஜன் என்பதனால் மங்கலமுதலியன காட்டப்பட்டன. விசுவவடிவவிலாஸவைசித்திரியசமத்கார (சாமர்த்திய) த்திற் றேர்ந்தவராதலின் நடராஜராஜன் என்றார்; தாண்டவமென்னும் ராஸமாத்திர விலாஸ வைசித்திரிய சமத்காரப் பிரவீணத்துவம் (தேர்ச்சி) நடமுதலிய பிறவிடத்து மிருத்தலால். அந்த ஆத்மதத்துவமோ வாக்காதிகளுக் கெட்டாதது என்று அறிவிக்க, உடுக்கையொலியின் நிமித்தத்தால் ஸநகாதியரை ஈடேற்ற விரும்பியவராய் இவ்வொன்பதைந்து அதாவது பதினான்கு முறை தன்னுள் ளிருப்பதான ஆத்மதத்துவத்தினைப் பிரகடஞ்செய்ய நிருத்தமுடிவில் உடுக்கை

अत्र सर्वत्र सूत्रेषु ह्यनुबन्धचतुर्दशम् ।
धात्वर्थं समुपादिष्टं पाणिन्यादीष्टसिद्धये ॥२॥

இங்கு எங்கும் சூத்திரங்களில் அநுபந்தம் (கடையெழுத்துப்) பதினான்கு பாணினிமுதலியோர் இஷ்டசித்திக்காகத் தாதுவின் பொருட்டுச் செவ்வையாய் உபதேசிக்கப்பட்டுளது. (௨)

யினை ஒலிப்பித்தார். அதாவது சப்திக்கச்செய்தார் யான் அந்த அவ்விரிக்கப்பட்ட ஒலியினின்றுண்டாகிய வர்ணவடிவினதும் ஆதியானதும் அதிரகசியமானதுமான சிவ (சிவசம்பந்தி) சூத்திரஸமூகத்தினை அல்லது கல்யாணவடிவ சூத்திரக்கூட்டங்களை ஆய்கின்றேன் அதாவது விசாரித்து விளக்குகின்றேன் என்பது பொருள். विमर्शे (விமர்சே) என்பது சாந்தஸம் (சந்தசுக்காக வந்தது) என்று அறியத்தக்கது. (௧)

व्याख्यानम्

अनुबन्धाः पाणिन्याद्युद्देश्यका एवेत्याह—

अत्रेति । एष्वित्यादिरर्थः । 'अन्त्यवर्ण—' इति वा-
पाठः । उभयथापि बहुव्रीहिः । कदम्बमन्यपदार्थः ।

समासान्तः । '—चतुर्दश' इति वा पाठः । तदा तत्पुरुषः । 'द्व्येकयोः' इति वत् '—चतुर्दश' इति प्रयोगः । धात्वर्थमिति । धातुमूलकशब्दशास्त्रप्रवृत्त्यर्थमित्यर्थः 'अन्त्यवर्णजाः शब्दाः' इति न्यायेन । तथा चोक्तमिन्द्रेण 'अन्त्यवर्णसमुद्भूता धातवः परिकीर्तिताः' इति ॥ २ ॥

வியாக்கியானம்.

அநுபந்தங்கள் பாணினிமுதலியோரையுத் தேசித்தனவேயா மென்று கூறுகின்றார்:— 'இந்த' என்பதனால் (இங்கு என்பதற்கு) இவற்றில் என்றல் முதலியன பொருள். अन्त्यवर्णः (அந்தியவர்ண) என்றும் பாடமாம். இரு விதத்தாலும் பகுவிரீஹி (அன்மொழித்தொகை)யாம். கதம்பமந்நிய பதார்த்தம். ஸமா ஸாந்தமாம். "चतुर्दश பதினான்கு" என்றும் பாடம். அப்போது தத்புருஷனும் (வேற்றுமைத் தொகையாம்). द्व्येकयोः என்பது போல:— 'चतुर्दश' என்பது பிரயோகம். தாதுவின் பொருட்டு என்பதற்கு. தாதுவை(வினைப்பகுதி

अइउण्

अकारो ब्रह्मरूपः स्यान्निर्गुणः सर्ववस्तुषु ।
चित्कलामिं समाश्रित्य जगद्रूप उणीश्वरः ॥३॥

அகாரம் எல்லாவஸ்துக்களிலுமுள்ள நிர்குணமான பிரஹ்மவடிவமாம். சித்கலையாகிய (इं யை) இ காரத்தைச் செவ்வையாய் ஆசிரயித்து, ஜகத்து வடிவ उण् (உண்) ஈசுவரனும்.

யை)க் காரணமாகவுடைய சப்தசாஸ்திரப் பிரவிருத்தியின் பொருட்டு என்பது பொருள்; 'அந்தியவர்ணத்திற்றோன்றியன சப்தங்கள்' என்னும் நியாயத்தால். அப்படியே இந்திரனும் "அந்திய வர்ணத்தினின்றுண்டானவை தாதுக்களென்று சொல்லப்படும்." என்று சொல்லப்பட்டிருக்கின்றது. (மகேசுவர சூத்திரங்களின் கடைசி யெழுத்துக்கள் அநுபந்தமென்றும் इत् (இத்) என்றும் சொல்லப்படும்)

व्याख्यानम्

तत्राद्येन सूत्रेण सर्ववर्णानां समस्तभुवनानां च समुद्भवरूपं स्वात्मतत्त्वमुपदिष्टमित्याह—

अकार इति । अनेन अः परमशिवो निर्गुणः इ मायामाश्रित्य उः व्यापकः सगुणः परमेश्वरः ण् आसीदिति सूत्रार्थः सूचितः । सर्ववस्तुषु परापश्यन्तीमध्यमावैखर्यादिषु । 'चित्कलामि' मित्यत्र 'गायत्रीं' 'पद्मिनी । मितिवदीकारो बोध्यः । अत्र सूत्रे ईकारस्तु त्रिनेत्रेण नोदितः । इकारेणैव ईकारः प्रकटितः । अत्र प्रमाणम् 'असद्वा इदमग्र आसीत् । ततो वै सदजायत' इति श्रुतिः । असद्ब्रह्म वै निश्चयेन अग्रे सृष्टेः पूर्वम् इदम् अकाररूपाक्षरात्मकमासीत् । ततोऽक्षरादसतो वै सत् सगुणमजायत जातमिति तदर्थः । तदुक्तं गीतायाम् 'अक्षराणामकारोऽस्मि' इति ॥ २ ॥

வியாக்கியானம்.

அதில் முதற் சூத்திரத்தினால் சகல எழுத்துக்களினாதும், சகல புவனங்களினதுமான செவ்வையான உற்பத்திவடிவ ஸ்வாத்மதத்துவம் உபதேசிக்கப்பட்டதென்று கூறுகின்றார்.— 'அகாரம்' என்பதனால், अ அ வென்னும் பரம

சிவஞான நிர்க்குணன் इ இகாரமாகிய மாயை யினை ஆசிரயித்து, उ (உ) வாகிய வியாபக ஸகுண பரமேசுவரன், ण् (ண்) ஆனார் என்று சூத்திரார்த்தம் சூசிக்கப்பட்டது. சகலவஸ்துக்களி லும் அதாவது பரா பைசந்தி மத்யமா வைகரி முதலியவற்றிலும். 'சித்கலையாகிய இயை' என்னுமிவ்விடத்தில், 'गायत्रीं (காயத்ரீயை), அல்லது 'पद्मिनीं (பத்மினீயை)' என்பதுபோல ஈகாரம் அறியத்தக்கதாம். இங்குச் சூத்திரத் தில் ஈகாரமோ முக்கண்ணரால் சொல்லப் படவில்லை. இகாரத்தினாலேயே ஈகாரம் வெளிப் படுத்தப்பட்டது. இதில் பிரமாணம், "இது முன் நிச்சயமாக அசத்தாயிருந்தது. அதி லிருந்தும் சத்து உண்டாயிற்று." என்னும் சுருதி. அஸத்து (காரணவடிவு) பிரஹ்மம். வை வை என்பது நிச்சயமாக. முன் சிருஷ்டிக்கு முன். இஃது அகாரவடிவு அக்ஷரசொரூபம். அதிலிருந்து அதாவது அக்ஷரமாகிய அஸத் திலிருந்து ஸத்து அதாவது ஸகுண முண்டா யிற்று என்பது அச்சுருதியின் பொருள். அது, கீதையிலும் "அக்ஷரங்களுள் அகாரம் யான்" என்று சொல்லப்பட்டுளது. (௫)

अकारः सर्ववर्णाग्र्यः प्रकाशः परमशिवः ।
आदिरन्त्येन संयोगादहमित्येव जायते ॥ ४ ॥

அகாரம் எல்லா வெழுத்துக் கட்கும் முதன்மையானது; பிரகாசரூப பரமசிவனும். முதலாவது கடைசியோடு சேர்தலால் அஹம் (யான்) என்றே உண்டாகின்றது. (ச)

व्याख्यानम्

अत एवाह—

अकार इति । आदिरन्त्येन संयोगादिति । आदिः अकारः । अन्त्यो हकारः । अकारादिहकारान्ताः सर्वे वर्णास्ततः परमात्मनः समभवन्नित्यर्थः ॥ ४ ॥

வியாக்கியானம்.

இதனையே கூறுகின்றார் :—'அகாரம்' என்பதனால் 'முதலாவது கடைசியோடு சேர்தலால்' என்பதனால் முதலாவது அ (अ) காரம். கடைசி ஹ (ह) காரம். அகாரமுதல் ஹகாரந்தமான எல்லாவெழுத்துக்களும் அப் பரமாத்மாவினின்று முண்டாயின வென்பது பொருள். (ச)

सर्वं परात्मकं पूर्वं ज्ञप्तिमात्रमिदं जगत् ।
ज्ञप्तेर्बभूव पश्यन्ती मध्यमा वाक्ततः स्मृता ॥५

எல்லாமாகிய இந்த ஜகத்து முன் பரமாத்மா வடிவ ஞெப்திமாத்திரமாயிருந்தது. ஞெப்தியி னின்றும் பசியந்தி (பைசந்தி) உண்டாயிற்று. அதனின்றும் மத்யமைவாக்கு உண்டாயிற் றென்று கருதப்படுகின்றது (ரு)

व्याख्यानम्

सर्वमिति । ईश्वर एवानादिजीवोपाध्याश्रितकर्मप्रेरितप्राणव्यापारानन्तरं नाभौ पराख्यं मायापरिणाममुपेत्य हृदि पश्यन्त्याख्यमुपेत्य विशुद्धिचक्रे मध्यमाख्यमुपेत्य ॥ ५ ॥

வியாக்கியானம்.

'எல்லாம்' என்பதனால், ஈசுவரனே அநாதி ஜீவோபாதியின் ஆசிரயத்துள்ள கர்மத்தினால் பிரேரிக்கப்பட்ட பிராண வியாபாரத்தின் பின், நாபியில் பரா என்னும் மாயாபரிணாமத்தினை யடைந்து, இருதயத்தில் பைசந்தி யென்னும் பெயரை யடைந்து, விசுத்திசக்கரத்தில் மத்யமை யென்னும் பெயரை யடைந்து, (ரு)

* वक्रे विशुद्धिचक्राख्ये वैखरी सा मता ततः ।
ज्ञप्त्याविर्भावमात्रात्मा मध्यमावाक्समायुता ।९

அதன் பின் விசுத்திசக்கரமென்னும் பெயருள்ள முகத்தில் அது வைகரி யென்று மதிக்கப்படுகின்றது. ஞெப்தியினால் ஆவிர்பாவமாத்திரவடிவினது மத்யமாவாக்கோடு கூடியதாம். (௯)

व्याख्यानम्

पश्चाद्वक्त्रे वैखर्याख्यमवाप्य वेदादिरूपो भवतीत्यर्थः । श्रुतिरपि, 'वागेव विश्वा भुवनानि जज्ञे' इति सूक्ष्मा वागेव विश्वाकारेण परिणमते विवर्तते वेत्यर्थः । श्रुत्यन्तरमपि 'वाचैव विश्वं बहुरूपं निबद्धम्' 'तदेतदेकं प्रविभज्योपभुङ्क्ते' इति । अत्र वर्णसंभवकाले । अ इ उ ऋ ऌ इति वर्णपञ्चकमेव सर्वेषामेकोनपञ्चाशदक्षराणां भूतपञ्चकानां पञ्चवर्गाणां च क्रमेण योनिः । तच्च दीर्घह्रस्वभेदद्विविधम् ॥ ९ ॥

---

* वक्रे विशुद्धिचक्राख्ये वैखरी सा मता ततः ।
सृष्ट्याविर्भावमात्रात्मा मध्यमा वाक्समीरिता ॥

வியாக்கியானம்.

பின் முகத்தில் வைகரி யென்னும் பெயரை யடைந்து, வேதமுதலியவடிவ மாகின்றது என்பது பொருள். சுருதியும், "வாக்கே எல்லாப் புவனங்களையும் ஈன்றது." என்றது. சூக்கும வாக்கே ஜகத்துவடிவமாகப் பரிணமிக்கின்றது அல்லது விவர்த்திக்கின்றது என்பது பொருள். வேறு சுருதியும், "வாக்கே வெகு வடிவமான ஜகத்தாய்க் காட்டப்பட்டது." "அந்த இவ்வொன்றனையே மிகப் பிரித்துப்புசிக்கின்றது." என்றது. இங்கு வர்ணசம்பவகாலத்தில், अ इ उ ऋ ऌ, (அ, இ, உ, ரு, லு,) என்னும் எழுத்தைந்துமே எல்லாவற்றிற்கும் அதாவது நாற்பத்தொன்பது வர்ணங்கட்கும் பூதபஞ்சகங்கட்கும் பஞ்சவர்க்கங்கட்கும் கிரமமாக யோனியாம் (பிறப்பிடமாம்). அதுவும் நெடில் குறில் என்னும் பேதத்தால் இருவகைத்தாம்.

(கு)

अकारं सन्निधीकृत्य जगतां कारणत्वतः ।
इकारः सर्ववर्णानां शक्तत्वात्कारणं मतम् ॥ ७॥
जगत्स्रष्टुमभूद्वाञ्छा यदा ह्यासीत्तदाभवत् ।
कामबीजमिति प्राहुर्मुनयो वेदपारगाः ॥ ८ ॥

அகாரத்தைச் சந்நிதிப்படுத்தி ஜகத்திற்குக் காரணமாதலால் இகாரம் எல்லா வெழுத்துக்கட்கும் சக்தமாதலின் காரணமென்று கொள்ளப்படுகின்றது. (எ)

ஜகத்தைச் சிருஷ்டிக்க இச்சையுண்டாயிற்று. எப்போது இச்சை யிருந்ததோ அப்போது காமபீஜம் உண்டாயிற்று என்று வேதத்தின் கரைகண்ட முநிவர் கூறுவர். (அ)

व्याख्यानम्

तत्र सर्वत्र इकारस्यैव स्वतन्त्रतामाह—

अकारमिति ॥ ७ ॥

जगत्स्रष्टुमभूद्वाञ्छेति । उक्तं च 'स्वप्रकाशपरमात्मवस्तुनो दृश्यमानजगतः सिसृक्षया कामतः पर-

शिवप्रवेशनं कामबीजमिदमेव निश्चितम् ॥' इति बी-जबिन्दुद्वयारूढं साध्ययोनिस्वरूपकम् । महाकामकला-रूपमात्मानं चिन्तयेत्प्रिये ॥' इति च ॥ ८ ॥

வியாக்கியானம்.

அங்கு எவ்விடத்தும் इ (இ) காரத்திற்கே ஸ்வதந்திரத்தன்மையினைக் கூறுகின்றார் :— 'அகார' என்பதனால். (எ)

'ஜகத்தைச் சிருஷ்டிப்பவருக்கு இச்சையுண்டாயிற்று' என்பதனால், அது, "ஸ்வப்பிரகாச பரமாத்மவஸ்துவிற்குக் காணப்படுகின்ற ஜகத்தைச் சிருஷ்டிக்கும் இச்சையினால் காமத்தால் பரமசிவப்பிரவேசனமாம். இதுவே காமபீஜமென்று நிச்சயிக்கப்பட்டதாம்" என்றும், "பீஜமும் பிந்துவுமாகிய இரண்டிலேறியதும் ஸாத்திய யோனிஸ்வரூபமுடையதும், மகா காமகலாரூபமுமான ஆத்மாவினைச் சிந்திக்க வேண்டும் பிரியமுள்ளவளே!" என்றும் சொல்லப்பட்டுளது. (அ)

अकारो ज्ञप्तिमात्रं स्यादिकारश्चित्कला मता ।
उकारो विष्णुरित्याहुर्व्यापकत्वान्महेश्वरः ॥९॥

அகாரம் ஞெப்திமாத்திரமாம். இகாரம் சித்கலை யென்று கொள்ளப்படுகின்றது. உகாரம் விஷ்ணு வென்று கூறுவர். வியாபகத்தன்மையால் மகேசுவரனும். (கூ)

व्याख्यानम्

उक्तमेव द्रढयति—अकार इति । उ व्यापकत्वेन-ण् ईश्वर आसीदित्यर्थके उणीश्वर इत्यत्रेति भावः॥९॥

வியாக்கியானம்.

கூறியதனையே திடமாக்குகின்றார் :—'அகாரம் என்பதனால்'. उ (உ) வியாபகத் தன்மையால் ण् (ண்) ஈசுவரரானார் என்னு மர்த்தமுடையதாம் 'उणीश्वरः' (உணீசுவரன்) என்னுமிடத்தில் என்பது கருத்து. (கூ)

ऋलृक्

ऋलृक् सर्वेश्वरो मायां मनोवृत्तिमदर्शयत् ।
तामेव वृत्तिमाश्रित्य जगद्रूपमजीजनत् ॥१०॥
ऋलृङ्महेश्वरो मायां विस्तारित चराचरम् ।
पत्नीमाश्रित्य चिद्रूपो जनयामास केवलः ॥१०॥

ऋलृक् (ருலுக்) ஸர்வேசுவரன் மாயையாகிய மனோவிருத்தியைக் காட்டினார். அந்த விருத்தியினையே ஆசிரயித்து ஜகத்வடிவத்தினைப் பெற்றார் (பயந்தார்).

வேறு பாடம்.

கேவல சித்ரூபமான ऋलृक् (ருலுக்) மகேசுவரர் மாயை யென்னும் பெயருடையதும் விஸ்தரிக்கப்பட்ட சராசரமுடையதுமாகிய பத்தினியை யாசிரயித்துச் சிருஷ்டித்தார். (க0)

व्याख्यानम्

ननु सर्ववेदान्तेषु परमेश्वर एक इति निश्चितत्वात्, मायामीं चित्कलांसमाश्रित्य जगद्रूपोभूदित्युक्ते अद्वैत-हानिस्स्यादित्याशंकायामाह—

ऋलृगिति । तत्र आद्यपाठे ऋ परमेश्वरः लृ मायाख्यां मनोवृत्तिं क् अदर्शयत् । तामेवाश्रित्य स्वेच्छया जगज्जनयामासेत्यर्थः । पाठान्तरे रसता । (तां मनोवृत्तिमाश्रित्येदं चराचरं जनयामासेत्यर्थः ।) ऋ परमेश्व इत्यत्र "ऋतं सत्यं परं ब्रह्म पुरुषं कृष्णपिंगळम्" इति श्रुतिः प्रमाणम् । ऋतं तत्पदार्थः परं ब्रह्म सत्यमित्यर्थः । श्रुत्यन्तरमपि । "सोऽकामयत बहुस्यां प्रजायेयेति" श्रीतन्त्रेऽपि । "मम चाभून्मनोरूपं लृकारः परमेश्वरि" इति । ऋलृवर्णौ यथा तादात्म्यापन्नौ तथेत्यर्थः ॥ १० ॥

வியாக்கியானம்.

அப்படியானால் எல்லா வேதாந்தங்களிலும் பரமேசுவரன் ஒருவர் என்று நிச்சயிக்கப்பட்டிருத்தலால் மாயையாகிய ஈம் என்னும் சித்கலையினைச் செவ்வையாயாசிரயித்து ஜகத் வடிவாஞென்று கூறியபோது, அத்வைத

ஹானி யுண்டாமென்னு மாசங்கையிற் கூறுகின்றார் :—

'ऋऌक (ருலுக்)' என்பதனால், அதில் முதற் பாடத்தில் 'ऋ (ரு)' பரமேசுவரன் 'ऌ (லு)' மாயை யென்னும் மனோவிருத்தியினை 'क् (க்)' காட்டினார். அதனையே (மாயையினையே) ஆசிரயித்துத் தனதிச்சையினால் ஜகத்தைப் படைத்தார் என்பது பொருள். (வேறுபாடத்தில் அம்மனோவிருத்தியினை ஆசிரயித்து, இச் சராசரத்தினை யுண்டுபண்ணினார் என்பது பொருள்). ऋ (ரு) பரமேசுவரன் என்னும் இதில் "ருதம் சத்தியம், பரப்பிரஹ்மம், புருஷன், கிருஷ்ணபிங்களம்" என்னும் சுருதி பிரமாணமாம். ருதம் என்பது தத்பதார்த்தமான பரப்பிரஹ்மம் சத்தியமென்பது பொருள். வேறு சுருதியும், "அவர் அநேகமாவேனாக; பலவாய்ப் பிறப்பேனாக என்று சங்கற்பித்தார்." என்று கூறுகின்றது. ஸ்ரீ தந்திரத்திலும், "பரமேசுவரி! எனது மனோவடிவம் ऌ (லு) காரம் ஆயிற்று" என்று கூறப்பட்டுளது. 'ऋऌ (ருலு)' வர்ணமிரண்டும் எப்படித் தாதாத்மிய மடைந்துள்ளனவோ அதுபோல என்பது பொருள். (௧௦)

वृत्तिवृत्तिमतोरत्रभेदलेशो न विद्यते ।
चन्द्रचन्द्रिकयोर्यद्वद्यथा वागर्थयोरपि ॥ ११ ॥
स्वेच्छया स्वस्य चिच्छक्तौ विश्वमुन्मीलयत्यसौ ।
वर्णानां मध्यमं क्लीबं ऋलवर्णद्वयं विदुः ॥ १२ ॥

விருத்திக்கும் விருத்தியுடையவனுக்கும் இங்கு பேதலேசமில்லை. சந்திரனுக்கும் சந்திரிகை (நிலவொளி)க்கும், அப்படியே வாக்கினுக்கும் அர்த்தத்திற்கும் (பேதலேசமில்லாதது)போல.

தனதிச்சையினால் தனது சித்சக்தியில் இவர் உலகத்தை விழிப்பிக்கின்றார். எழுத்துக்களின் மத்தியமமான 'ऋऌ (ருலு)' வர்ணமிரண்டனையும் அலியாக (பிரஹ்மரூபமாக) அறிவர்.

व्याख्यानम्

तदाह—भेदलेश इति। वास्तव इत्यर्थः ॥११-१२॥

வியாக்கியானம்.

அதனைக் கூறுகின்றார் :— 'பேதலேசம்' என்பதனால், வாஸ்தவமாக இல்லை.யென்பது பொருள். (கக—கஉ)

एओङ्

एओङ्मायेश्वरात्मैक्यविज्ञानं सर्ववस्तुषु ।
साक्षित्वात्सर्वभूतानां स एक इति निश्चितम् ॥

'एओङ् (ஏ ஓங்)' என்பது எல்லாப்பூதங்களி லும் மாயா ஈசுவராத்ம ஐக்கியவிஞ்ஞானமாம். சர்வபூதங்கட்கும் சாக்ஷியாயிருத்தலின் அது ஒன்றென்று நிச்சயிக்கப்பட்டுளது. (கந)

व्याख्यानम्

ननु जनयामासेत्युक्ते जन्यजनकभावे अद्वैतहानिः स्यादित्याशंकायां "तत्सृष्ट्वा तदेवानुप्राविशत् । तदनुप्रविश्य" इति (तै-) श्रुतिमाश्रित्याह—

एओङ्मायेश्वरात्मैक्येति । जन्यजनकत्वं च स्वस्यैव तत्तद्रूपेण विवर्तनादिति नाद्वैतहानिः । अकारोकाराभ्यां निष्पन्नप्रणवरूपेणौकारेण सगुणनिर्गुणयोरैक्ये बोधिते तेनैव दृष्टान्तेन सर्वत्रैक्यबुद्धौ द्वैतनिरासो ध्वनितः । समष्टिव्यष्टिभेदेन पूर्ववर्णयुतद्वितीयस्य तद्युक्त-

तृतीयस्य च समन्वयबोधकमिदं सूत्रम्। अ अक्षरात्मकः इ मायायुक्तः सन्यः सः ए ज्ञानरूपः प्रज्ञानात्मा। सर्ववस्तूनामेकत्वाददैतोपपत्तिः। न नानात्वं जन्यजनकत्वं च। स्वयं प्रविश्य तत्तद्रूपेण वर्तते इत्यर्थः। वटबीजन्यायेन च पूर्वसूत्रद्वयजनितं वर्णपञ्चकमेव सकलजगत्कारणमिति प्रागुक्तम्। उत्तरसूत्रवर्णानामपि तस्मादेव संभवः। समष्टिव्यष्टिभेदेषु पूर्ववर्णयुतद्वितीयस्य पूर्ववर्णयुततृतीयस्य च संयोगजनकमिदं सूत्रम्। समन्वयबोधनमपि एकत्वेनोक्तम्। अत्राप्यपरत्वे सर्ववेदसंमतं च। तथा च सनकदक्षिणामूर्त्तिसंवादे महावाक्यविवरणे॥ श्लोकः॥ "शृणु त्वं सावधानेन चतुर्णामपि साम्यता। वेदानां च महाभाग चतुष्काणामिहोच्यते॥ ब्रह्मशब्देन यद्वस्तु तत् प्रज्ञानमुदीरितम्। प्रज्ञानं ब्रह्म यस्माद्धि तस्माद्ब्रह्मास्म्यहं ततः॥ तद्ब्रह्म सर्वसाक्षित्वात्तत्त्वमस्येव तत्त्वतः। अन्यत्ववारणार्थाय ह्ययमात्मेत्याथर्वणी॥" इति॥ १३॥

வியாக்கியானம்.

அப்படியானால் 'பெற்றார்' என்று சொல்லவே, ஜந்நிய ஜநகத் (பெறப்படுவது பெறுவது எனும்) தன்மையில் அத்வைத ஹானியுண்டாகுமே யென்னு மாசங்கையில், "அதனைச் சிருஷ்டித்து, அதனையே பின்பற்றி (அதிலேயே) புகுந்தார். அதில் அநுப்பிரவேசித்து" என்னும் தைத்திரிய சுருதியை ஆசிரயித்துக் கூறுகின்றார்:— 'ஏஓங் (ஏ ஓங்)' என்பதனால் ஜந்நிய ஜநகத்தன்மையும் தானே அந்தந்தவடிவமாக விவர்த்தித்தலால் என்பதனால் அத்வைத ஹானி இல்லை. அகார உகாரங்களா லுண்டாகிய பிரணவவடிவ ஓங்காரத்தால் ஸகுணநிர்குணங்களின் ஐக்கியம் போதிக்கப்படவே அந்தத் திருஷ்டாந்தத்தினாலேயே எங்கும் ஐக்கிய புத்தியுளதாக, துவைதநீக்கம் தொனிக்கப்பட்டது. சமஷ்டி வியஷ்டி பேதத்தால் பூர்வ வர்ணத்தோடுகூடிய இரண்டாவதற்கும் அதனோடுகூடிய மூன்றாவதற்கும் சமன்வயத்தினைப்போதிப்பதாம் இச்சூத்திரம். எந்த अ (அ) அக்ஷரவடிவினர் इ (இ) மாயையோடுகூடியவரானாரோ அவர் ए (ஏ) ஞானவடிவ பிரஞ்

ஞானாத்மாவாம். எல்லாவஸ்துக்களின் ஒரு மையால் அத்வைதப் பொருத்தமாம். நாநாத்வமும் ஜந்ய ஜநகத்வமுமில்லை. தாமே பிரவேசித்து அவ்வவ்வடிவினராயிருக்கின்றாரென்பது பொருள். வடபீஜநியாய (ஆலம்வித்து திருஷ்டாந்த)த்தால் முன் சூத்திரமிரண்டாற் பிறந்த வர்ணபஞ்சகமே சகலஜகத்காரணமாமென்று முன் கூறப்பட்டது. உத்தர (பின்) சூத்திரவர்ணங்கட்கும் அதிலிருந்தே சம்பவமாம். சமஷ்டி வியஷ்டி பேதங்களில் பூர்வ வர்ணத்தோடுகூடிய இரண்டாவதற்கும் பூர்வ வர்ணத்தோடுகூடிய மூன்றாவதற்கும் ஸம்யோகத்தினை யுண்டுபண்ணுவதாம் இச்சூத்திரம். சமந்வயபோதனமும் ஏகத்வத்தாற் சொல்லப்பட்டது. இங்கும் அபரத்துவத்தில் சர்வவேதசம்மதமாம். அவ்வாறே, ஸநகதக்ஷிணாமூர்த்தி ஸம்வாதமான மகாவாக்கிய விவரணத்தில், "மகாபாக்கியவானே! நீ கேள். வேதங்கள் நான்கின் நான்கு வாக்கியங்களின் ஸாம்யம் (சமத்தன்மை) இங்கு சொல்லப்படுகின்றது.—பிரஹ்மசப்தத்தினால் எந்தவஸ்து சொல்லப்படுகின்றதோ அது பிரஞ்ஞானம் எனப்படும். எதனால் பிரஞ்ஞானம் பிரஹ்

ऐऔच्

ऐऔच ब्रह्मरूपस्सन् जगत्स्वान्तर्गतं ततः ।
इच्छया विस्तरीकर्तुमाविरासीत्कृपानिधिः ॥१४॥

'ऐऔच् (ஐ ஔ ச்)' பிரஹ்மசொரூபமாயிருந்துகொண்டு அதன்பின் தன்னுள்ளிருக்கும் ஜகத்தை இச்சையினால் விரிப்பதற்கு வெளிப்பட்டார். (கச)

மேமா அதனாலேயே பிரஹ்மம் யானாயிருக்கிறேன். ஆதலால் அந்தப்பிரஹ்மம் சர்வசாக்ஷியாயிருத்தலின், உண்மையால் அதுவே நீயாகிறாய். அந்நியத்தன்மை (பிரஹ்மம் தன்னின் வேறானதென்னும் வேற்றுமை)யை நீக்குதற் பொருட்டு 'இவ்வாத்மா பிரஹ்மம்' என்றது அதர்வணவேதம்" என்று சொல்லப்பட்டது. (கரு)

व्याख्यानम्

स्वात्मभूतस्य परमेश्वरस्य जगत्कारणत्वं कथमित्याशंकायामाह—

ऐऔजिति। ततः स्वान्तर्गतं जगद्विस्तारयितुमिच्छुः। ऐ ज्ञानादिशक्तियुक्तः। अक्षर इति अतः पूर्वसूत्रगत अकारेकारदीर्घयोगस्यैव ऐकारत्वमेकत्वं च। सः प्रज्ञानस्वरूपपरमेश्वरो यः सः पूर्वसूत्रगत अकारदीर्घ उकारदीर्घस्यैव योगे औकारत्वं यः सः प्रज्ञानात्मा मायाशबलितः सः औकारो यः सः, आविरित्याविर्भावे। उक्तं च स्वरविमर्शिन्यां 'उकारज्ञानसंयोगात्सर्वसंभूति रिष्यत' इति। इच्छया जगद्विस्तारयितुमुद्युक्त इत्यर्थः। अत्राह "प्रणवेन जगद्व्याप्तं मायायामवतिष्ठते" इति ज्ञानोत्तमे। एवं तत्वसमुदायानां त्रयोदशवर्णाच्छि-वादिप्रकृत्यन्तानामुद्भवः। प्रकृतिपुरुषविवेक उत्तरत्र कथ्यतेऽस्मिन्सूत्रे उपसंहारत्वेन पठ्यते। अत्र ह्रस्वदी-र्घप्रभेदाच्चतुर्दशस्वराणामेव संकीर्तनं चतुर्दशभुवन चतुर्दशचक्र चतुर्दशप्रकाराणामिति निष्कर्षः। तदुक्तं शिवगौरीसंवादे महामन्त्रतत्त्वप्रकाशिन्यां, ॥ श्लो ॥

तत्वमन्त्रं महेशानि मम रूपं त्वमेवहि । चतुर्दशात्मकं चक्रं स्वरचक्रमितीरितम् ॥ त्रयोदशात्मकं तुर्यमावयोर्मन्त्रमम्बिके । उच्छूनकाले बिन्द्वात्मा तस्मादक्षर संभवः ॥ बिन्दुस्फोटनमात्रेण वर्णानां च समुद्भवः । तस्मादाकाश मुख्यानि भूतानि समजायत ॥ बिन्दुः श्रीचक्र राजस्य परब्रह्मात्मकं त्विति । चतुर्दशात्मकं पश्चाच्चक्राकारेण संभवः ॥ उत्पन्नभुवनान्यत्र चतुर्दश चतुर्दश ॥" इति ॥ १४ ॥

வியாக்கியானம்.

ஸ்வாத்மவடிவமான பரமேசுவரனுக்கு ஜகத்காரணத்வ மெவ்வாறு மென்றாசங்கித்துக் கூறுகின்றார்:--ऐऔच् என்பதனால், அதன் பின் (ஈக்ஷித்தபின்) தன்னுள் (சூக்ஷ்மமாய்) இருக்கும் ஜகத்தினை விரிக்க விரும்பியவர். 'ऐ ஐ') ஞானசக்தியோடு கூடியவர். अक्षर என்னும் இதன் முந்திய சூத்திரத்துள்ள 'अ அ' கார

'उ உ' கார மிரண்டன்யோகத்திற்கே 'ऐ ஐ' காரத்வமும் ஏகத்வமுமாம். அந்த பிரஞ்ஞான ஸ்வரூப பரமேசுவரன் எவரோ அவர் பூர்வ சூத்திரத்துள்ள அகாரதீர்க உகாரதீர்கங்களின் யோகத்திலேயே எந்த ஔ காரத்வமோ அது பிரஞ்ஞாணுத்மாவாகிய மாயாசபளிதமாம் (மாயையோடு கூடியதாம்). அந்த ஔ காரம் எதுவோ அது 'आविः ஆவி:' என்பது ஆவிற்பாவத்திலாம். அது ஸ்வர விமர்சினியில், "उ உகாரஞானசம்யோகத்திஞல் சர்வசம்பூதி (எல்லாவற்றினுற்பத்தி) அங்கீகரிக்கப்படுகின்றது." என்று சொல்லப்பட்டிருக்கிறது. இச்சையினுல் ஜகத்தினை விரித்தற்கு எத்தனித்தார் என்பதுபொருள். இதில் "பிரணவத்திஞல் ஜகத் வியாபிக்கப்பட்டதாய் மாயையில் நிலைத்திருக்கின்றது" என்று ஞானேத்தமத்திற் கூறுகின்ருர். இவ்வாறு பதின்மூன்று வர்ணத்தினின்று சிவாதி பிரகிருதியந்தமான தத்துவசமுதாயங்களின் உற்பவ

மாம். பிரகிருதிபுருஷவிவேகம் பிந்தியவிட த்துச்சொல்லப்படுகின்றது. இச்சூத்திரத்தில் உபசங்காரத்தன்மையாகப் படிக்கப்படுகின் றது. இங்கு பதினான்கு ஸ்வரங்களின் ஹ்ரஸ்வ தீர்க பேதத்தால் பதினான்கு புவன பதினான்குசக்ர பதினான்குபிரகாரங்களின் கீர்த்தனமாமென்பது நிச்சயம். அது சிவகௌரி சம்வாதமான மகாமந்திர தத்வப்ரகாசினியில் "மகேசானியே! எனது வடிவமான தத்துவ மந்திரம் நீயே நிச்சயம். பதினான்கு வடிவ சக்கிரம் ஸ்வாசக்கிர மென்று சொல்லப்படும். பதின்மூன்று வடிவினது துரியம். அம்பிகையே! இவ்விரண்டன் மந்திரமாம். குறைந்த கலையில் பிந்துவடிவினதாம். அதினின்று அக்ஷரசம்பவமாம். பிந்துஸ்போடன (பிந்துவின் வெடித்தல்) மாத்திரத்தால் வர்ணங்களின் நல்லுற்பவமாம். அதினின்று ஆகாயாதி பூதங்கள் செவ்வையாய் உண்டாயின. பிந்துவானது ஸ்ரீசக்ரராஜத்தின் பரப்பிரஹ்மவடி

हयवरट्

भूतपञ्चकमेतस्माद्धयवरण्महेश्वरात् ।
व्योमवाय्वम्बुवह्न्याख्य भूतान्यासीत्स एव हि॥ १५॥

இந்த மஹேசுவரனிடத்திலிருந்து हयवरट् (ஹயவரட்) என்னும் பூதமைந்தும் உண்டாயின. அவரே ஆகாசம் வாயு ஜலம் அக்னியென்னும் பூதங்களானார். (௧௫)

வினதா மென்க பதினான்கு வடிவினது பின் சக்கிராகாரமாக சம்பவமாம். உண்டாகிய புவனங்கள் இங்கு பதினான்கு பதினான்காம்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. (௧௪)

व्याख्यानम्

तत आत्मनस्सकाशादाकाशादिभूतसम्भवमाह—
भूतपञ्चकमिति । स एव परमेश्वर एव ॥ १५ ॥

வியாக்கியானம்.

அதன்பின் ஆத்மாவினின்று ஆகாயமுதலிய பூதங்களின் சம்பவத்தினைக் கூறுகின்றார்:— 'பூதமைந்தும்' என்பதனால். அவரே அதாவது பரமேசுவரனே. (௧௫)

हकाराद्व्योमसंज्ञं च यकाराद्वायुसंज्ञितः ।
वकाराज्जलसंज्ञश्चरेफोऽग्निरितिशैववाक् ॥ १६ ॥

हकाराद्व्योमसंज्ञश्चयकाराद्वायुरुच्यते ।
रकाराद्वह्निस्तोयंतु वकारादितिशैववाक् ॥ १६ ॥

ஹகாரத்தினின்று ஆகாயப் பெயருடையதும், யகாரத்தினின்று வாயுப்பெயருடையதும், வகாரத்தினின்று ஜலப்பெயருடையதும் ரகாரத்தினின்று அக்கினியுமாமென்பது சைவவாக்காம். (௧௬)

வேறுபாடம்

ஹகாரத்தினின்று ஆகாயப் பெயருடையதும் யகாரத்தினின்று வாயுவும் சொல்லப்படுகின்றது. ரகாரத்தினின்று அக்கினியும், வகாரத்தினின்று ஜலமுமாமென்பது சைவவாக்காம்.

व्याख्यानम्

हकारादिति । "तस्माद्वा एतस्मादात्मन आकाशस्संभूतः । आकाशाद्वायुः वायोरग्निरग्नेरापः" इति श्रुतेः एतस्मात्परमेश्वराद्भूतपंचकं आकाशादि प्रपंचकारणमासीत् ॥ १६ ॥

लण्

आधारभूतं भूतानामन्नादीनां च कारणम् ।
अन्नाद्रेतस्ततो जीवः कारणत्वाल्लणीरितम् ॥१७॥

ஆதாரபூதமும் பூதங்கட்கு, அந்நாதிகட்குக் காரணமுமாம் (பிருதிவி). அந்நத்தினின்று வீரியமாம். அவ்வீரியத்தின்று ஜீவனும். (இவ்வாறு) காரணமாதலால் लण् (லண்) என்று (தனித்துக்) கூறப்பட்டது. (கஎ)

வியாக்கியானம்.

'ஹகாரத்தினின்று' என்பது. "அந்தப் பிரசித்தமான இந்த ஆத்மாவினின்று ஆகாயம் உண்டாயிற்று. ஆகாயத்தினின்று வாயு, வாயுவினின்று அக்னி, அக்னியினின்று ஜலம்........" என்னும் சுருதியினால் இப்பரமேசுவரனினின்று பிரபஞ்சகாரணமான ஆகாயமுதலிய பூதபஞ்சக முண்டாயிற்று. (கசு)

व्याख्यानम्

नन्वस्मिन्सूत्रे भूतपञ्चकमासीदित्युक्तम् । तत्राकाशादि भूतचतुष्टयमेवोक्तं न पृथिवीत्याकाङ्क्षायां यदा

धारस्वरूपं तत्सर्वकारणमिति सूत्रान्तरमवोचत्—

आधारेति । भूतानां प्राणिजातानां उद्भिज्ज स्वेदज जरायुजाण्डजानां प्रधान कारणत्वा दाधारभूतं पृथ्वी पुनश्चान्नादीनां कारणं 'अन्नाद्रेतः' इति न्यायात् । एतेषां कारणत्वात्प्रत्येकत्वेन लणीत्युदीरितमित्यर्थः १७

வியாக்கியானம்.

அப்படியானால் இச்சூத்திரத்தில் பூதபஞ்சக முண்டாயிற் றென்று கூறப்பட்டது. அங்கு ஆகாயமுதலிய பூத நான்கே கூறப்பட்டது. பிருதிவி சொல்லப்படவில்லையே என்னும் விருப்பத்தில் எது ஆதாரஸ்வரூபமோ அது சர்வகாரணமா மென்று வேறுசூத்திரத்தினைச் சொல்லலாயினார்:-'ஆதாரபூதமும்' என்பதனால். பூதங்கட்கு அதாவது உதபிஜ்ஜஸ்வேதஜ ஜராயுஜ அண்டஜங்களான பிராணிக்கூட்டங்கட்குப் பிரதானகாரண மாதலால் ஆதாரபூதமாம் பிருதிவி மறுபடியும் அந்நாதிகட்கும் காரணமாம்; 'அந்நத்தினின்று வீரியமுண்டாயிற்று' என்னும் நியாயத்தால். அவற்றிற்குக் காரணமாதலின் பிரத்தியேகத் தன்மையாக 'லண் லண்' என்று கூறப்பட்டதென்பது பொருள். (௧௭)

अमङ्गणनम्

शब्दस्पर्शौ रूपरसगन्धाश्च अमङ्गणनम् ।
व्योमादीनां गुणा ह्येते जानीयात्सर्ववस्तुषु ॥१८॥

சப்தஸ்பரிசங்களும் ரூபரஸகந்தங்களுமாம் अमङ्गणनम् (ஞமஙணனம்). இவை எல்லாவஸ்துக்களிலுமுள்ள ஆகாயாதிகளின் குணங்களென்றறிக. (௧அ)

व्याख्यानम्

ततः पृथिव्यादीनां कारणत्वेन स्थितानां तन्मात्राणामुत्पत्तिक्रममाह—

शब्दस्पर्शाविति । व्योमादीनां गुणानेकैक कारणा नेतान् जानीयात्सर्ववस्तुषु इति । षट्त्रिंशद्वर्णाः सर्वजगत्कारणभूतस्य सर्वरूप पुरुषस्य सर्वे गुणा अभवन्नतुनासिका इत्यर्थः ॥ १८ ॥

வியாக்கியானம்.

அதன்பின் பிருதிவி முதலியவற்றிற்குக் காரணமாயிருப்பன வாகிய தன்மாத்திரை

झभञ्

वाक्पाणि च झभञासीद्विराड्रूपचिदात्मनः ।
सर्वजन्तुषु विज्ञेयं स्थावरादौ न विद्यते ॥
वर्गाणां तुर्यवर्णा ये कर्मेन्द्रियमया हि ते ॥१९॥

'झभ ஜப' என்பது விராட் வடிவசிதாத்மாவின் வாக்கும் பாதமுமாம். சர்வஜந்துக்களிலும் அறியத்தக்கதாம்; ஸ்தாவராதிகளிலிருப்ப தில்லை. வர்க்கங்களின் நான்காவது வர்ணங் களெவையோ அவைகர்மேந்திரியமயங்களே யாம். (௧௯)

களின் உற்பத்திக்கிரமத்தினைக் கூறுகின்றார்:— 'சப்த' ஸ்பரிசங்களும், என்பதனால். ஆகாய முதலிய ஒவ்வொன்றன் காரணங்களான இக் குணங்களை சர்வவஸ்துக்களிலும் அறிக என்க. சர்வஜகத்காரணவடிவ ஸர்வரூப புருஷனது சர்வ குணங்களான முப்பத்தாறு வர்ணங்களும் அநுநாஸிகங்களாயாயின என்பது பொருள் ()

व्याख्यानम्

ततः सूत्राभ्यां कर्मेन्द्रियवर्गमुद्घाटयति—

घढधष्

घढधष् सर्वभूतानां पादपायू उपस्थकः ।
कर्मेन्द्रियगणा ह्येते जाता हि परमार्थतः ॥ २० ॥

'घढधष् கடதஷ' என்பவை ஸர்வஜந்துக்களின் பாத பாயு உபஸ்தங்களாம். கர்மேந்திரிய கணங்களான இவை பரமார்த்தத்தினின்றுமுண்டாயின. (உ0)

वाक्पाणीचेति चिद्रूपस्य शिवस्य प्राणिजातस्य च झकार भकारौ स्थावरादिषु विना विराड्रूपं विज्ञेयमित्यर्थः ॥ १९ ॥

வியாக்கியானம்.

அதன்பின் இரண்டு சூத்திரங்களால் கர்மேந்திரிய வர்கத்தினை விரிக்கின்றார்:- 'வாக்கும் பாதமுமாம்' என்பதனால், சித்ரூபமான சிவத்தினதும் பிராணிக்கூட்டங்களினதுமான 'झ ஜ' கார 'भ ப' காரங்கள் ஸ்தாவராதிகளிலின்றி விராட்வடிவ மென்றறியத்தக்கதா மென்பது பொருள். (கக)

व्याख्यानम्

अथ क्रमप्राप्तं पादादिकमाह—

जबगडदश्

श्रोत्रत्वङ्नयनघ्राणजिह्वाधीन्द्रियपंचकम् ।
सर्वेषामपि जन्तूनामीरितं जबगडदश् ॥ २१ ॥

சகலஜந்துக்களின் சுரோத்திரம், துவக்கு, சக்ஷுா, கிராணம், நாவென்னும் ஞானேந்திரிய மைந்தும் 'जबगडदश् ஜபகடதச்' என்று சொல்லப்பட்டுளது. (உக)

घढधषिति । परमार्थतः परमशिवसकाशात् इमे कर्मेन्द्रियगणाः सर्वजन्तूनां पादपायूपस्था घढधवर्णा जाता इत्यर्थः ॥ २० ॥

வியாக்கியானம்.

இனிக்கிரமமாகப்பெறப்பட்ட பாதாதிகளைக் கூறுகின்றார் :—'घढधष् கடதஷ்' என்பதனால் பரமார்த்தத்தினின்றும் அதாவது பரமசிவத்தினின்றும் இக்கர்மேந்திரியகணங்களான ஸர்வ ஜந்துக்களின் பாத பாயு உபஸ்தங்களாகிய 'घडध கடத' என்னும் வர்ணங்களுண்டாயின வென்பது பொருள். (உ0)

व्याख्यानम्

क्रमप्राप्तं ज्ञानेन्द्रियसंभवमाह—

श्रोत्रेति । 'वर्गाणां मध्यवर्णोत्थो ज्ञानेन्द्रियगणः स्मृतः' इति वचनशासनात् जबगडदवर्णसंभवो ज्ञानेन्द्रियगण इति सर्वत्र सर्वेषां प्राणिजातानामेते वर्णा ज्ञानेन्द्रियाणां जनका इति वा विज्ञेयमित्यर्थः ॥२१॥

வியாக்கியானம்.

முறையில் பெறப்பட்ட ஞானேந்திரிய சம்பவத்தினைக் கூறுகின்றார்:— 'சுரோத்திரம்' என்பதனால், வர்கங்களின் மத்தியவர்ணத்தினின் றெழுந்தது ஞானேந்திரியகணமென்று கருதப்படுகிற தென்னும் வசனமாகிய சாசனத்தால் 'जबगडद ஜபகடத' வர்ணங்களின் சம்பவமாம் ஞானேந்திரியகணம் என்றுவது எவ்விடத்தும் எல்லாப் பிராணிகளின் ஞானேந்திரியங்களை யுண்டுபண்ணுவனவாம் இவ்வர்ணங்கள் என்றுவது அறியத்தக்கதா மென்பது பொருள். (உக)

खफछठथचटतव्

प्राणादिपंचकं चैव मनोबुद्धिरहंकृतिः ।
बभूव कारणत्वेन खफछठथचटतव् ॥ २२ ॥
वर्गद्वितीयवर्णोत्थाः प्राणाद्याः पंच वायवः
मध्यवर्गत्रयाज्जाता अन्तःकरणवृत्तयः ॥ २३ ॥

பிராணாதியைந்தும் மனமும் புத்தியும் அகங்காரமும் காரணத்தன்மையாக 'खफछठथचटतव् கபசடதசடதவ்' என உண்டாயின. (உஉ)

பிராணாதிபஞ்சவாயுக்களும் வர்கத்திநிரண்டாவதெழுத்தினின்றுண்டாயினவாம். மத்தியவர்கத்தின் மூன்றுவதினின்றுண்டாயினவாம் அந்தக்கரணவிருத்திகள். (உ௩)

व्याख्यानम्

ततः प्राणादिपञ्चकमनोबुध्यहंकाराः समुन्मील्यन्तइत्याह—

प्राणादीति । एतैरष्टवर्णैः प्राणादिपंचक मनोबुद्ध्यहंकारा जगतां कारणत्वेन संभूता इत्यर्थः ॥२२–२३॥

कपय्

* प्रकृतिं पुरुषं चैव सर्वेषामेव संमतम् ।
संभूतमिति विज्ञेयं कपाभ्यामिति निश्चितम् ॥२४॥

பிரகிருதியினையும் புருஷனையும் 'कप கப'க்களினின்றுண்டாயின வென்றறியவேண்டு மென்பது எல்லோருடைய சம்மதமா மென்பது நிச்சயிக்கப்பட்டதாம். (உச)

வியாக்கியானம்.

அதன்பின் பிராணாதிபஞ்சகமனோபுத்தியகங்காரங்களுண்டாகின்றனவென்று கூறுகின்றார்:- 'பிராணாதி' என்பதனால், இவ்வெட்டு வர்ணங்களால் பிராணாதிபஞ்சக மனோபுத்தியகங்காரங்கள் ஜகத்தின் காரணத் தன்மையாக உண்டாயின என்பது பொருள். (உ௨-உங)

व्याख्यानम्

ततः सर्वप्राणिकारणत्वेनाद्यन्तवर्गद्वयाक्षरग्रहणेन संपुटीभावं प्रकृतिपुरुषाभ्यां प्रकाशयति—

---

* अन्यद्वयसंभूतौ पुरुषः प्रकृतिर्गुणः ।

शषसर्

सत्त्वं रजस्तम इति गुणानां त्रितयं पुरा ।
समाश्रित्य महादेवः शषसर्क्रीडति प्रभुः ॥२५॥

முன் 'शषस ஶஷஸ' ஆகிய சத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் மூன்று குணங்களையும் ஆசிரயித்து மகாதேவராகிய பிரபு கிரீடிக்கின்றார். ()

प्रकृतिमिति । कचारपकारजातौ प्रकृतिपुरुषावित्यर्थः ॥ २४ ॥

வியாக்கியானம்.

அதன்பின் சர்வபிராணிகளின் காரணத்தன்மையாக ஆதியந்த வர்க்கமிரண்டன் இரண்டெழுத்துக்களைக் கிரஹித்தலால் பிரகிருதி புருஷனின் சம்புடத்தன்மையினை விளக்குகின்றார்:– 'பிரகிருதி' என்பதனால். 'क க' கார 'प ப' கார மிரண்டினின்றுண்டாயினவாம் பிரகிருதியும் புருஷனுமென்பது பொருள். (உ௪)

व्याख्यानम्

ततोऽवस्थात्रयं निरूपयति—

शकाराद्राजसं रूपं षकारात्तामसोद्भवः ।
सकारात्सत्त्वसंभूतिरिति त्रिगुणसंभवः ॥ २६ ॥

'श ஶ'காரத்தினின்று ராஜஸரூபத்திநுற்பத்தியாம் 'ष ஷ' காரத்தினின்று தமஸினுற்பத்தியாம் 'स ஸ' காரத்தினின்று சத்வஸம்பூதியாம். இவ்வாறு முக்குணசம்பவமாம். (உசு)

सत्त्वमिति । पुरा सृष्टेः प्राक् शषसवर्ण सम्भूतान्सत्त्वरजस्तमोगुणानाश्रित्य परमशिवः सर्वभूतेषु क्रीडतीत्यर्थः ॥ २५ ॥

வியாக்கியானம்.

அதன் பின் அவஸ்தை மூன்றனையும் நிரூபிக்கின்றார் :— 'சத்துவம்' என்பதனால். முன் அதாவது சிருஷ்டிக்கு முன்னே 'ஶஷஸ' வர்ணங்களினின்றுண்டாகிய சத்வ ரஜஸ் தமோ குணங்களை யாசிரயித்துப் பரமசிவன் சர்வ பூதங்களிலும் கிரீடிக்கின்றாரென்பது பொருள்.

व्याख्यानम्

शकारादिति । स्पष्टम् ॥ २६ ॥

'श ஶ' காரத்தினின்று என்பது வெளிப்படை.

हल्

तत्त्वातीतः परः साक्षी सर्वानुग्रह विग्रहः ।
अहमात्मा परोहल्स्यामिति शंभुस्तिरोदधे ॥२७॥

इति श्रीमन्नन्दिकेशविरचिता
चतुर्दशसूत्री व्याख्या काशिकाख्या
॥ संपूर्णा ॥

தத்துவாதீதனும், மேலானவனும், சாக்ஷியும், சர்வாநுக்ரஹவிக்ரஹனும், ஆத்மாவும் பரனுமாகிய யான் ஆகின்றேன் என்று (கூறி) சம்புவானவர் மறைந்தார். (உ௭)

இவ்வாறு காசிகை முடிந்தது

सर्वतत्त्वजनकः स्वयं तत्त्वातीतः इति ज्ञापनार्थमेवैतत्सूत्रं चकारेत्याह---

तत्त्वातीत इति । सर्वानुग्रहविग्रहः साक्षी तत्त्वातीतः हल्स्यादिति ढक्कानिनादव्याजेन सर्वेषां मुनिजनानां तत्त्वमुपदिश्य शंभुः तिरोदधे इत्यर्थः ।

हकारः शिववर्णस्यादिति शैवागमस्थितिरिति । शिवम् ॥ २७ ॥

इति श्रीशिवतत्त्वविद्यापारावारपारीणश्रीमद्व्याघ्रपाद-मुनिसुत श्रीमदुपमन्युमुनीन्द्र विरचिता ।

आदिसूत्रकाशिकाव्याख्या ।

तत्त्वविमर्शिनी

॥ संपूर्णा ॥

வியாக்கியானம்.

எல்லாத் தத்துவங்களையு முண்டுபண்ணுவது ஸ்வயம் தத்துவாதீதமாமென்று அறிவித்தற் பொருட்டே இச்சூத்திரத்தினை யியற்றி யருளினரென்று கூறுகின்றார்:—'தத்துவாதீதம்' என்பதனால், சர்வாநுக்கிரகவிக்கிரக சாக்ஷி தத்துவாதீதன் ஹல் ஹல் ஆகின்றேனென்று உடுக்கை யொலிநிமித்தமாக எல்லா முனிவர்கட்கும் தத்துவத்தினையுபதேசித்து சம்புவானவர் மறைந்தன ரென்பது பொருள். சிவம். (உஎ)

இவ்வாறு காசிகையின் வியாக்கியானம் முடிந்தது.

॥ ओं तत्सद्ब्रह्मणे नमः ॥